# ஐரோப்பியரின் தமிழ் இலக்கணப் பங்களிப்பு: வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம் (எழுத்ததிகாரம் சொல்லதிகாரம்): ஒரு நுண்ணாய்வு

ராஹிலா ஷியாத்

***ஆய்வுச் சுருக்கம்:***
*ஐரோப்பிய நாட்டை தமது பிறப்பிடமாகக் கொண்டு மதப்பணி புரிய வந்த பலருள் கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi 1680 - 1742)எனும் இயற்பெயரைக் கொண்ட வீரமாமுனிவர் முதன்மையானவராகத் திகழ்கின்றார். தம் மதத் தொண்டிலும் தமிழ்த் தொண்டிலும் சுமார் 37 ஆண்டுகளைக் கழித்த இவர், இலக்கியம், இலக்கணம், அகராதி, மருத்துவம், மொழிபெயர்ப்பு என சுமார் 30 - க்கும் மேற்பட்ட பல்துறை சார்ந்த நூல்களை இயற்றியுள்ளமை குறிப்பிட்டுக் கூறத்தக்கது. இவரால் இயற்றப்பட்ட தமிழுக்கான இலக்கண நூல்களாக A Grammar of the Common Dialect of Tamil Latin - 1728 (கொடுந்தமிழ் இலக்கணம்), A Grammar of the High Dialect of Tamil Language termed as stem Tamil Latin - 1730 (செந்தமிழ் இலக்கணம்),Clavics - 1735 (கிளாவிக்ஸ்), தொன்னூல் விளக்கம் என்பவை அமைகின்றன. தமிழைத் தமது தாய் மொழியாகக் கொண்டிராத ஒரு வெளிநாட்டவரால் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுக்கப்பட்ட நூலாக 'தொன்னூல் விளக்கம்' எனும் நூல் அமைகிறது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், செய்யுளியல் ஆகிய ஐந்து இயல்களுள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற முதலிரண்டு இயல்களையும் நன்னூல் என்னும் தமிழ் மரபிலக்கண நூலோடு ஒப்பிட்டு மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***பிரதான சொற்கள்:*** *தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், நன்னூல்*

**அறிமுகம்**
இன்று உலகில் வழங்கும் பிரதான மொழிகளுள் காலத்தால் அழியாத ஸ்திரத்தன்மை கொண்ட மொழியாக தமிழ் மொழி விளங்குகின்றது. இவ்வா றான உறுதித் தன்மைக்கு அதன் இலக்கண அமைப்பே முக்கிய காரணம். அவ்வகையில் தமிழ் இலக் கணத்தை எடுத்துக் கூறுகின்ற முதன்மை நூலாகத் தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் விளங்கு கின்றது. இது எழுத்ததிகாரம், சொல்ல திகாரம் ஆகிய பகுதிகளில் தமிழ் மொழி அமைப்புக்கு இலக்கணம் வகுத்துத் தருவதோடு மட்டுமல்லாமல், தமிழரின் வாழ்வியல் அம்சங்களுக்கும் இலக்கியங்களுக்கும் இலக்கணம் வகு த்துள்ளமைக்கு அதன் பொருளதிகாரம் சான்றாக விளங்குகின்றது.

தமிழ் இலக்கண முதன்மை நூலான தொல்காப்பியத்திற்கு பின்பு காலத் துக்குக் காலம் தமிழ் மொழிக்கான இலக்கண நூல்கள் பல தோற்றம் பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலான நூல்கள் தொல்காப்பியத்தை அடி யொற்றியே அமைந்துள்ளன. தொல் காப்பியம் தோற்றம் பெற்று சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு புத்த மித்திரன் என்பவரால் இயற்றப்பட்ட வீரசோழியம் எனும் நூலானது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணங்களையும் தனித்தனி ஐந்து அதிகாரங்களில் கூறுவதோடு வடமொழி இலக்கணச் சார்பு மிகுதியாகக் கொண்ட முதலாவது நூலாகவும் விளங்கு கின்றது.

"வடமொழி அறிஞர்கள் தமிழ் இலக்கணத்தை உணர்ந்து கொள்ளு தலையும், தமிழ் அறிஞர்கள் வடமொழி இலக்கணத்தை அறிந்து கொள்ளுதலையும், ஒரு காரணமாகக் கொண்டும் வீரசோழியத்தை எழுதி இருக்கலாம் என்றும் தமிழ் மொழி அமைப்பிலான புதிய இலக்கணச் செய் திகளையும் முதன்முதலாக வடமொழி ஊடுருவி

யாப்பிலக்கணத் துறையில் ஏற்பட்ட விரிவுகளையும், வடமொழியில் தண்டி ஆசிரியர் செய்த அணி இலக்கணத்தை அப்படியே தருத லையும் நோக்கமாகக் கொண் டுள்ளார்" என வீரகத்தி,[1] வீரசோழிய ஆசிரியரான புத்தமித்திரரின் நோக் கத்தை குறிப்பிடுகிறார்.

வீரசோழியத்தை அடுத்து 12 ஆம் நூற்றாண்டில் குணவீர பண்டிதர் என்பவர் நேமிநாதம் என்னும் சுருக்கமான இலக்கண நூல் ஒன்றை வெண்பா யாப்பில் எழுதியுள்ளார். எழுத்ததிகாரத்தில் 24 நூற்பாக் களையும், சொல்லதிகாரத்தில் 71 நூற்பாக்களையும் பாயிரம், அவைய டக்கம் ஆகிய இரண்டு நூற்பாக்கள் அடங்களாக மொத்தம் 97 நூற்பாக்கள் மாத்திரமே இது கொண்டுள்ளன. இதனை அடுத்து சுமார் 13 ஆம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவர் என்பவரால் எழுதப்பட்ட நன்னூல் எனும் நூலானது தொல்காப்பியத்திற்கு அடுத்த நிலையில் வைத்து நோக்கப் படுகிறது. தொல்காப்பியத் துக்குப் பின்பு தோன்றிய இலக்கண நூல் களுள் நன்னூல் சிறப்புப் பெறுவ தற்கான காரணம் " தொல் காப்பியத் திற்குப் பின் நீண்ட கால இடை வெளியில் ஏற்பட்ட மொழி அமைப்பில் இழையோடிய புதிய இலக்கண அம்சங்களைப் பொதுமைப் படுத்திச் சேர்த்து, எளிமையும் தெளிவும் கொண்ட ஒரேயொரு இலக்கண நூலாக இது அமைந் திருப்பதாகும்"[2] என வீரகத்தி குறிப்பி டுகிறார்.

இதற்குப்பின், 17 ஆம் நூற்றாண்டில் வைத்திய நாத நாவலர் என்பவரால் எழுதப்பட்ட பழைய மரபு தழுவிய 'இலக்கண விளக்கம்' என்ற நூலானது, பல்வகைப்பட்ட நூற்பாக் களைக் கொண்டு கலம்பகம் போன்ற அமைப்பில் காணப்படுகிறது. இதனை அடுத்து திருக்குருகூர் சுப்பிரமணிய தீட்சிதர் என்பவரின் பிரயோக விவேகமும், சுவாமிநாத தேசிகர் என்பவரின் இலக்கணக்கொத்தும் தமிழ் இலக்கண நூல்களாக வெளிவந்தன. மேலும், முத்துவீர உபாத்தியாயரின் முத்துவீரியமும், சாமி கவிராசரின் சுவாமி நாதமும் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணமும் 19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இலக்கண நூல்களாக அமைந் துள்ளன.

இவ்வாறு தமிழ் மொழியைத் தமது பூர்வீக மொழியாகக் கொண்ட தமிழ் அறிஞர்கள் பலரால் தமிழ் மொழிக்கு பல இலக்கண நூல்கள் எழுதப் பட்டதைப் போன்று, தமது மதத்தைப் பரப்புவதற்காக தமிழகம் வந்த ஐரோப்பிய பாதிரிமார்கள் சிலராலும் தமிழ் மொழிக்குரிய இலக்கண நூல்கள் எழுதப்பட்டுள்ளமை வியந்து பாராட்டக்கூடியது. "16 ஆம் நூற் றாண்டில் பாதிரிமார்களால் தமிழ் இலக்கண நூல்கள் ஐரோப்பிய மொழியில் எழுதப்பட்டமை பற்றிய குறிப்புக்கள் கிடைத்தாலும் முழுமை யான விபரங்கள் கிடைக்கவில்லை. இன்று கிடைக்கும் கிறிஸ்தவ அறிஞர்களின் இலக்கண நூல்களுள் முதல் இலக்கண நூலாக பிலிப் பால்டே (1632-1672) எழுதிய டச்சு தமிழ் இலக்கணம் விளங்குகிறது. இவர் இந்தியாவைப் பற்றி எழுதும் போது ஒரு இயலில் தமிழ் இலக்கணம் பற்றி எழுதியுள்ளார். இதில் தமிழ் வரி வடிவமைப்பு, தமிழ் வரிவடிவங்களின் ஒலி மதிப்பு, வினைச் சொற்களின் இலக்கணங்கள் ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளது"[3] என தெ. பொ. மீனாட்சி சுந்தரத்தின் கருத்தை ஆதார மாகக் கொண்டு செ. வை. சண்முகம் குறிப்பிடுகிறார்.

---

[1]வீரகத்தி, க., பிற்கால இலக்கண மாற்றங்கள்(எழுத்து), குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2011, ப.38

[2]வீரகத்தி, க., மு.கு.நூல், ப.48

[3]சண்முகம், செ. வை., கிறிஸ்தவ அறிஞர்களின் இலக்கணப்பணி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1993, ப.10

பதினெட்டாம் நூற்றாண்டில் ப்ர்சிரிக்ல் (Przirkyl) என்பவர் இலத்தீன் மொழியில் எழுதிய Principia Linguae Brahmanicae என்ற நூலில் ஏழு பக்கங்களில் தமிழ் மொழியின் அமைப்பு ஓரளவு விளக்கப்பட்டுள் ளதாகவும்,1716 ஆம் நூற்றாண்டில் சீகன்பால்கு என்ற ஐரோப்பியரால் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட கிரமட்டிக்கா தமுலிக்கா (Grammatica Damulica) என்ற நூலின் முதற் பக்கத்தில் 'தமிழ் இலக்கணம் பல விதிகள், சொல் அடுக்கு வரிசை கொண்டது. தமிழ் என்ற மலபாரி மொழியை சுலபமாகக் கற்கும் வழி. இம்மொழி கிழக்கிந்தியரிடையே பேசப் படுவது. இதுவரை ஐரோப்பாவில் அறியப்படாதது' என்று தமிழ் மொழி பற்றிய கருத்துக் குறிப்பிடப்பட்டுள் ளதாகவும் 1778 ஆம் நூற்றாண்டில் பெப்ரீஷியஸ் என்பவர் ஆங்கில மொழியில் A Grammar for Learning the Principles of the Malabar Language என்ற இலக்கண நூலை எழுதியுள் ளதாகவும் செ. வை. சண்முகம்[4] குறிப்பிடுகிறார்.

இத்தாலி நாட்டை பிறப்பிடமாகக் கொண்ட கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi 1680 - 1742) என்பவர் சமயப் பணிக்காக தமிழகம் வந்து வீரமாமுனிவர் என்ற தமிழ் நாமத்தை தமக்குத் தாமே சூட்டிக்கொண்டு, சமயப்பணியோடு தமிழ்ப்பணியும் புரிந் தவர். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்துஸ்தானி போன்ற இந்திய மொழிகளிலும் பாரசீகம், லத்தீன், போர்ச்சுக்கீசு போன்ற பிற நாட்டு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று இருந்தாலும் தமிழ் மொழிக்கு மட்டுமே அரிய பல சேவைகள் செய்து அதன் பயனாக செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம், இலக்கணம், அகராதி, மொழிபெயர்ப்பு, மருத்துவம் என சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட அரிய பல நூல்களை எழுதியுள்ளார்.இவர் இலத்தீன் மொழியில் எழுதிய முதலாவது இலக்கண நூல்களாக A Grammar of the Common Dialect of Tamil Latin - 1728 (கொடுந்தமிழ் இலக்கணம்) விளங்குகின்றது. இது 1778 இல் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்டுள்ள தோடு 1806 இல் ஹென்றி ஹார்ஸ்ட் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அடுத்து1730 இல் இலத்தீன் மொழியில் இவரால் எழுதப்பட்ட A Grammar of the High Dialect of Tamil Language termed as stem Tamil Latin (செந்தமிழ் இலக்கணம்) என்ற இன்னொரு நூலானது செந்தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு உபயோ கமாகும் பொருட்டு எழுதப்பட்டுள்ளது. இதனை பெஞ்சமின் என்பவர் 1822 இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். மேலும் இவர் எழுதிய Clavics - 1735 (கிளாவிக்ஸ்) என்ற நூலும் தமிழ் மொழியின் இலக் கணத்தை இலத்தீன் மொழியில் எடுத்துக்கூறுகிறது. இவ்வாறு தமிழ் மொழியின் இலக்கணத்தை இலத்தீன் மொழியில் எழுதியதோடு நின்று விடாமல் தொன்னூல் விளக்கம் என்னும் நூலை 1730 இல் தமிழ் மொழியிலும் எழுதியுள்ளார். இது வீரமாமுனிவரின் தமிழ்ப்புலமைக்குச் சான்றாக விளங்குகின்றது. 'இலக்கிய வகையால் மூத்தோர் புதைத்த அரும் பயனாகிய பொருளைக் கண்டறிந்து எடுப்பதற்கு இலக்கண நூலே விளக்காக அமைவதால் இதற்குத் தொன்னூல் விளக்கம் எனப் பெயரிடப் பட்டுள்ளது' என இதன் சிறப்புப் பாயிரம் கூறுவதிலிருந்து இதற்குப் பெயரிடப்பட்டதன் நோக்கம் புலப்படு கிறது. இது எழுத்ததிகாரம், சொல்ல திகாரம், பொருளதிகாரம், யாப்பதி காரம், அணியதிகாரம் என ஐந்து அதிகாரங்களை 370 நூற்பாக் களுக்குள் உள்ளடக்கியுள்ளது.

எழுத்ததிகாரமானது எழுத்தியல், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விகாரம் என்ற மூன்று பகுதிகளையும் சொல்ல திகாரமானது சொற் பொதுவியல், வேற்றுமையியல், வினைச் சொல் லியல், இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல் என்ற ஐந்து பகுதி களையும்

---

[4]சண்முகம், செ. வை., மு.கு.நூ, ப.11

பொருளதிகாரமானது பொது, பதிகம், காரணம், விரிவு, தொகை, துணிவு, உரிமை, கால உரிமை, இடவுரிமை, பண்புரிமை, சாதித் தொழிலுரிமை, பற்றுதல் உரிமை, வடிவு உரிமை, ஒழுக்க உரிமை, சொல்லுரிமை ஆகிய பதினைந்து பகுதிகளையும் யாப்பதிகாரமானது செய்யுளுறுப்பு, செய்யுளியல், செய்யுள் மரபியல் ஆகிய மூன்று பகுதிகளையும் அணியதிகாரமானது சொல்லணியியல், பொருளணியியல் என இரண்டு பகுதி களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்நூலின் எழுத்ததிகாரப் பகுப்புக் களை பொதுவாக நோக்கும்போது, எழுத்ததிகாரத்தை ஒன்பது இயல் களாகப் வகுத்த தொல்காப்பிய மரபையோ, ஐந்து இயல்களை எழுத்த திகாரமாகக் கொண்ட நன்னூல் மரபையோ இவர் பின்பற்றாமல் தோற்றம், வகுப்பு, விகாரம் ஆகிய மூன்று இயல்களில் எழுத்ததிகாரத்தை அமைத்துள்ளார். பொதுவாக எழுத்தை முதலெழுத்து, சார்பெழுத்து என வகைப்படுத்தி பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யும் முதலெழுத்து என்றும் உயிர் மெய், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம், உயிரள பெடை, ஒற்றளபெடை என்னும் பத்தும் சார்பெழுத்து என்றும் எழுத்துப் பாகு பாட்டை நன்னூலைப் பின்பற்றி அமைத்துள்ளார்.

தனிக்குற்றெழுத்து அல்லாத ஏனைய எழுத்துக்களுக்குப் பின் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரம் குறுகி ஒலிக்கும் என்றும் வருமொழியில் யகரம் வந்தால் உகரமாகத் திரியும் என்று கூறும் நன்னூலைப் பின்பற்றி இவ்வாறு இவர் எழுத்ததிகாரம் பதினைந்தாவது நூற்பாவை செய்துள் ளமையை உதாரணமாகக் குறிப்பி டலாம்.

“தனிக் குறில் அல்லவற்று இறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப
தொடர் உயிர் உக்குறள் துடைத்து உணும் யவ்வரின்
உஇ யாம் சில முற்றுகரமும் அற்றே” (தொ.வி. எழு. நூ. 15)[5]

உயிரீற்றின் முன் உயிர் புணரும்போது யகரம் அல்லது வகரம் தோன்றுவதை நன்னூல் உடம்படு மெய் என்று கூற தொன்னூல் விளக்கம் புணர்பு எழுத்து என்று கூறுகிறது.

“இஈஐ வழி யவ்வும் ஏனை உயிர் வழி வவ்வும்
ஏ இருமையும் உடன்படு மெய் யாகும்”[6]என்ற நன்னூல் எழுத்ததிகார 162 வது சூத்திரமானது தொன்னூல் விளக்கத்தில் எழுத்ததிகார 20 வது நூற்பாவானது அப்படியே இவ்வாறு அமைகிறது.

“முதல் ஈற்று உயிரும் மொழியே சேர்புளி
இஈ எஐ ஈறு இயையும் யவ்வே
மற்றை உயிர்க் கீழ் வகரம் புணரும்” [7]

5 சுப்பிரமணியன், ச. வே., தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978, ப.17

6 புலியூர்க்கேசிகன்(பதி), ஆறுமுகநாவலர்: நன்னூல் காண்டிகையுரை, முல்லை நிலையம், சென்னை, 2014, ப.119

7 சுப்பிரமணியன், ச. வே., மு.கு.நூ, ப.78

நன்னூல் சொற்களின் புணர்ச்சி பற்றி கூறும் பகுதியை புணரியல் என்று கூறுகிறது. ஆனால் தொன்னூல் விளக்கம் எழுத்தின் விகாரம் என்று குறிப்பிடுகின்றது. நன்னூல் சொற் புணர்ச்சியில் எழுத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்றாக வகுக்க தொன்னூல் விளக்கம் திரிபு, அழிவு, ஆக்கம், திரட்டு என நான்காக வகைப்படுத்தியுள்ளது. இவ்வாறு வகைப்படுத்தல் வேறாக அமைந் தாலும் புணர்ச்சி பற்றிய விளக்கங்கள் பெரும்பாலும் நன்னூலை அடியொற்றி அமைந்துள்ளன. இதற்கு சான்றாக இரு நூல்களிலிருந்தும் சில நூற்பாக்கள் உதாரணமாகக் கொள் ளப்பட்டுள்ளன. அதாவது, ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி பற்றிய நன்னூல் எழுத்ததிகார 209 வது, 210 வது நூற்பாக்களும் தொன்னூல் விளக் கத்திலுள்ள எழுத்ததிகார 24 வது நூற்பாவும் ஒரே மாதிரி மேல்வருமாறு அமைந்துள்ளன.

" ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே"[8] (நன்.எழு.209)

"குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே"[9](நன். எழு. 210)

"ணனமுன் தகரம் டறஆம் முறையே
ணன அல்வழிக்கு என்றும் இயல்பாம்
வேற்றுமைப் பொருட்கு அவை வலிவரின் டறஆம்
ணன முன் குறில்வழி நகரம் ணன ஆம்
மற்றது ணன முன் மாய்ந்து கெடுமே"[10] (தொ.வி.எழு.24)

மேலும் "தனிக் குறில் முன் உயிர் வரின் இரட்டும்" என்ற நன்னூல் நூற்பாவை "தனிக்குறில் மெய் உயிர் சார்புளி மிகும்"[11] என்ற தொன்னூல் விளக்க நூற்பா ஒத்திருக்கின்றது. அதேபோல் லகர ளகர ஈற்றுப்புணர்ச்சி விதிகளும் எண்ணுப் பெயர்கள், திசைப் பெயர்கள் பற்றிய புணர்ச்சி விதிகளும் நன்னூலை அடியொற்றி அமைந்துள்ளன.

நன்னூலில் சொல்லதிகாரத்தில் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளதுபோல் தொன்னூல் விளக் கத்திலும் இடம்பெற்றுள்ளது. ஆனால், சொற்பொதுவியல் என்ற பகுதியில் இயற்சொல், திரிசொல், ஒருமொழி, தொடர்மொழி, ஒருவிலாப்பொதுமொழி, பகாப்பதம், பகுபதம், ஆகுபெயர், இருதிணை, ஐம்பால், மூவிடம், சாரியை என பன்னிரண்டாகக் கூறும் தொன்னூல் விளக்கம், வடசொல், திசைச் சொல் பற்றி எதுவும் கூறவில்லை. நன்னூலில் எழுத்த திகாரத்தில் இடம்பெற்றுள்ள சாரியை பற்றிய விளக்கங்களும் பதவியலில் அமைந்துள்ள பகுபதம், பகாப்பதம் பற்றிய விடயங்களும் தொன்னூல் விளக்கத்தில் சொல்லதிகாரத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன.

---

[8]புலியூர்க்கேசிகன்(பதி), மு.கு.நூ, ப.162
[9]புலியூர்க்கேசிகன்(பதி), மு.கு.நூ, ப.163
[10]சண்முகம், செ. வை., மு.கு.நூ, ப.79
[11]சுப்பிரமணியன், ச. வே., மு.கு.நூ, ப.82

சொல்லதிகாரத்தில் வேற்றுமையின் வரைவிலக்கணத்தைப் பற்றிக் கூறும் போது, பொருளை வேறுபடுத்துவதால் வேற்றுமை எனவும் அவை எட்டு எனவும் தொன்னூல் விளக்க சொல்லதிகார 55 வது நூற்பாவில் எடுத்துக்கூறி நன்னூலைப் பின்பற்றி யுள்ளார். மேலும் வேற்றுமைகளுக்குப் பொருள் கூறும்போதும் பெரும்பாலும் நன்னூல் நூற்பாக்கள் அப்படியே தழுவப்பட்டுள்ளன. இதற்கு உதாரண மாக மேல்வரும் நன்னூல் சொல்ல திகார 298 வது நூற்பா இவ்வாறு அமைகிறது.

"நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சிதக வது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே"[12]

நன்னூல் நான்காம் வேற்றுமைப் பொ ருள்களாக கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை என்பனவற்றை கூறியுள்ளது. இந்த நன்னூல் நூற்பாவை தொன்னூல் விளக்க சொல்லதிகார 59 வது நூற்பா அப்படியே பின்பற்றி இருப்பதை மேல்வரும் நூற்பா காட்டுகிறது.

"நான்காவதற்கு உருபு ஆகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்
பொருட்டு முறை ஆதியின் இதற்கு இது எனல் பொருளெ"[13]

வினைச் சொல்லியல் என்ற பகுதியில் வினையின் வகைகளை விளக்கி வினைக்குரிய வரைவிலக்கணத்தையும் மரபிலக்கண முறைப்படியே கூறியுள் ளார். மேலும், இறப்பு, எதிர்வு, நிகழ்வு என முக்கால முற்றுவினை, ஏவல் முற்றுவினை, வியங்கோள் முற்று வினை என வினை முற்று மூன்று என்றும் பெயரெச்சம், வினையெச்சம் என எச்சங்கள் இரண்டும் என்றும் குறிப்பிடும் தொன்னூல் விளக்கம் வினையெச்ச வாய்பாடுகளைப் பற்றி எதுவும் குறிப்பிடாது விகுதிகளைக் கூறி அதன் மூலம் வினைகளைத் தெளிவுபடுத்துகிறார்.

இடைச் சொல், உரிச் சொல் என்பவற்றின் வரைவிலக்கணங்கள், வகைகள் என்பவை நன்னூலை பின்பற்றியே அமைந்துள்ளன. இருந் தாலும் உரிச் சொல்லின் வகைகளை நன்னூல் கூறியுள்ளபடி விளக்காது உயிர்ப் பொருள்களின் குணப்பண்பு, இரு பொருளுக்கும் பொதுவாகிய தொழிற்பண்பு என்ற அடிப்படை யிலேயே விளக்கப்பட்டுள்ளன.

இரு நூல்களிலும் அமைந்துள்ள எழுத்ததிகாரத்தையும் சொல்ல திகாரத்தையும் பொதுவாகப் பார்க்கும் போது தொன்னூல் விளக்கமானது பெரும்பாலான இடங்களில் நன்னூலை பின்பற்றியிருப்பதை அவதானிக்க முடிகிறது. தொன்னூல் விளக்கத்தில் 141 நூற்பாக்களில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டு அதிகாரங்களும் அமைந்துள்ளன. அவற்றுள் சுமார் 36 நூற்பாக்கள் நன் னூலிலிருந்து அப்படியே முழுமையாக எத்தகைய மாற்றமுமின்றி எடுத்தாளப் பட்டுள்ளன. "வீரமாமுனிவரின் தமிழ் இலக்கணப் புலமைக்கு 1730 இல் அவர் எழுதிய தொன்னூல் விளக்கம் எனும் நூல் சான்றாக அமைகின்றது. இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணங்களின் அடிப்படையில் அமைந்தாலும் புதிய இலக்கணச் செய்திகள் எதையும் கூறவில்லை"[14] என க. வீரகத்தி குறிப்பிடுகிறார்.

---

[12] புலியூர்க்கேசிகன்(பதி), மு.கு.நூ, ப.62
[13] சுப்பிரமணியன், ச. வே., மு.கு.நூ, ப.88
[14] வீரகத்தி, க., மு.கு.நூல், ப.77

இருந்தாலும், தமிழை தமது பூர்வீக மொழியாகக் கொண்டிராத வீரமா முனிவரின் இத்தகைய துணிகரமான முயற்சி வரவேற்கத்தக்கது. ஏனென் றால் அவர் இவ்வாறான இலக்கண நூலின் மூலம் தமது  இலக்கண, இலக்கியப் புலமையை வெளிப்படுத் தியுள்ளார். மேலும் “இந்நூலின் உரை யாசிரியரும் இவராகவே இருப்பதனால் தான் கூற விரும்பும் கருத்தை நூற்பாவில் சுட்டுவிட்டுத் தேவைப்படும் இடங்களிலெல்லாம் விரிவாக விளக் கமாக உரையில் தெளிவாக்குவதற்கு வாய்ப்பைப் பெற்றுள்ளார். ஆசிரியரின் எண்ணங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் மாறுபட்ட கருத்துக்களை தவிர்க்கவும் இந்நிலை உதவுகிறது. பல இலக்கணங்கள், இலக்கியங் களிடையே ஆசிரியர் பெற்றுள்ள பயிற்சியை உரையும் நூலும் வெளிப் படுத்துகின்றது”[15] என ச. வே. சுப்பிரமணியன் கூறுவதும் நோக்கத் தக்கது.

**துணை நூல்கள்**


1. சண்முகம், செ. வை., (1993), கிறிஸ்தவ அறிஞர்களின் இலக் கணப்பணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. சுப்பிரமணியன், ச. வே., (1978), தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

3. புலியூர்க்கேசிகன், (2014), ஆறுமுக நாவலர்: நன்னூல் காண்டிகையுரை - 1 எழுத்த திகாரம், முல்லை நிலையம், சென்னை.

4. புலியூர்க்கேசிகன், (2014), ஆறுமுக நாவலர்: நன்னூல் காண்டிகையுரை - 2 எழுத் ததிகாரம், முல்லை நிலையம், சென்னை.

5. வீரகத்தி, க., (2011), பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து), குமரன் புத்தக இல்லம், கொழும்பு.


[15]சுப்பிரமணியன், ச. வே., மு.கு.நூ, ப.24